DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC.53/2025

Prosecution witness – PW 6

| | | |
|---|---|---|
| Name | : திரு.குமரேசன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1 , A2 Present.)
15.04.2026 at 12.40 P.M.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சிக்கல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 30.07.2024ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்த போது வழக்கின் வாதி முனியசாமி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.89/2024 பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNS –ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

3. பின்னர் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றேய தினமே 17.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள்கோபால் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. சம்பவ சாட்சிகளான முனியசாமி, ஆறுமுகம், மாரிமுத்து, வேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் அன்றே தினமே 18.00 மணிக்கு 1ஆம் எதிரியை அவரது வீட்டில் வைத்து கைது செய்தேன். 2வது எதிரியை 18.15 மணிக்கு வீட்டில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து இருவரையும் தக்க பிணையில் விடுவித்தேன்.

6. அ.சா.1க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.வெங்கடேஸ்வரன் ஆகியோரை விசாரித்து காயச்சான்று பெற்றேன். மருத்துவர் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கியுள்ளார். மருத்துவர் அ.சா.1க்கு வழங்கிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆகும்.

7. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து அன்றே எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNS –ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் தினத்திற்கு மறுநாள் மாலையில்தான் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் காயம்பட்ட நபர் காவல் நிலையத்திற்கு வந்து உடனடியாக புகார் மனு கொடுக்காமல் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரிகள் புகார்தாரரை வீட்டிற்குள் வைத்து தாக்கியதாகத்தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் யாருடைய வீடு என்று புகார் மனுவில் கூறப்பட்டுள்ளதா என்றால் எதிரி தினகரன் வீடு என்று கூறப்பட்டுள்ளது. புகாரில் எதிரிகள் எந்த அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்த ஆயுதத்தால் புகார்தாரரை தாக்கினார் என்று குறிப்பிட்டு புகார் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக யாரையும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் எதிரிக்கு ரூ.50 ஆயிரம் கொடுக்கவேண்டும் என்பதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள அருகில் உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

2. புகார் மனுவில் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மருத்துவர் அளித்த

காயச்சான்றிதழில் காயப்பட்டவரின் தந்தை பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். காயச்சான்றிதழில் காயம்பட்ட நபரை யார் தாக்கினார் எந்த வகையான ஆயுதத்தால் தாக்கினார் என்று குறிப்பிட்டு எந்த வித வார்த்தைகளும் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த 9 நாட்கள் பின்னர் காலதாமதமாகத்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி தினகரன் புகார்தாரர் மீது தனக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி புகார் கொடுத்தார் என்றும் நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யான புகார் மனுவை வாங்கி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் இடம் செல்லாமல் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.04.15 17:36:07 +0000